


யாழ்ப்பாணம் நெடுந்தீவு கிழக்கு
இரு மரபுந்தூய கந்தப்பமுதலி வழித்தோன்றலும்
உயர் திரு இராமனாதர் சுப்பிரமணயம்
அவர்களின் மைந்தருமாகிய

அமரர்

# திரு சுப்பிரமணியம் பாலச்சந்திரன்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# ஓராண்டு நினைவு மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மண்ணக வாழ்வில்
1958.04.21

விண்ணக வாழ்வில்
2010.04.15

அமரர்

# உயர் திரு சுப்பிரமணியம் பாலச்சந்திரன்

அவர்களின்

## திதி நிர்ணய வெண்பா

ஆண்டு விகிர்திச் சித்திரைத் திங்களிரண்டில்
பூண்ட பூர்வப்பிரதமை சேர்ந்த நற்திதியில் - விகடநகையில்
கொண்ட திறலோன் பாலச்சந்திரன் பேறெய்த
ஆண்ட நாயகன் பதம் பொருந்தும் நாளென்றறி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

எமது குடும்பத் தலைவியாய்
அன்போடும் பண்போடும்
எமைப் பேணிப் பாதுகாத்து வழி
நடத்தி வாழ்வாங்கு
வாழவைத்து இன்று
வாறுைறைந்து விட்ட எமது
அன்புத் தெய்வத்தின் பாதார
விந்தங்களில் இம் மலரினைச்
சமர்ப்பிக்கின்றோம்.

இங்ஙனம்
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



யாழ்ப்பாணம் நெடுந்தீவு கிழக்கு
இரு மரபுந்தூய கந்தப்பமுதலி வழித்தோன்றலும்
உயர் திரு இராமனாதர் சுப்பிரமணயம்
அவர்களின் மைந்தருமாகிய
அமரர்

# திரு சுப்பிரமணியம் பாலச்சந்திரன்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# ஓராண்டு நினைவு மலர்

## 04-05-2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

எமது அன்புத் தெய்வமாய்
குடும்பத்தில் ஓர் அங்கமாய்
வறுமையிலும் சிறுமையின்றி
மகிழ்வித்து எமை யெல்லாம்
துன்பத்திலும் இன்பத்திலும்
இரண்டறக் கலந்தூட்டுவித்து
உள்ளது போது மென்றும்
எளிமை வாழ்வுதன்னை
இயக்கியும் ஈசன் இட்டபடி
வாழ்வென்ற எடுத்துக்காட்டாய் வாழ்ந்து
பிறருக்கு விருப்பு வெறுப்பின்றியும்
வாழ்வாங்கு வாழ்ந்து காட்டி
காற்றிலகப்பட்ட கற்பூர மென
எதிர்பாராது விரைவாய் மறைந்து சென்ற
எமது குடும்ப விளக்கானது
மீளாத மறுமை வழிச் சென்றதை எண்ணி
எம் இதய மலர்களால் போற்றி நின்று
இம் மலர் தந்தோம்
சமர்ப்பணமாய்.

இங்ஙனம்
மனைவி, பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



அமரர் சுப்பிரமணியம் பாலச்சந்திரன் அவர்களின்
ஆத்ம சாந்திப்பிரார்த்தனையின் போது ஓதப்பட்ட

# பஞ்சபுராண தோத்திரங்கள்

திருச்சிற்றம்பலம்

## தேவாரம்

அங்கத்தை மண்ணுக்காக்கி ஆர்வத்தை உனக்கே தந்து
பங்கத்தைப் போகமாற்றிப் பாவித்தேன் பரமா நின்னைச்
சங் கொத்தமேனிச் செல்வாசாதல் நாள் நாயேன் உன்னை
எங்குற்றாய் என்ற போதால் இங்குற்றேன் என் கண்டாயே.

## திருவாசகம்

பொய்ய னேன் அகம் நெகப் புகுந்தமுதூறும்
புதுமலர்க்கழலிணையடி பிரிந்தும்
கையனேன் இன்னுஞ் செத்திலேன் அந்தோ
விழித்திருந்துள்ளக் கருத்தினை இழந்தேன்
ஐயனே அரசே அத்தனே அயன்
மாற்கறி யொண்ணாச்
செய்ய மேனியனே செய்வகை யறியேன்
திருப் பெருந்துறை மேவிய சிவனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

என்னையுன்பாத பங்கயம் பணிவித்து
என்பெலாம் உருகநீ எளிவந்து
உன்னை யென்பால் வைத்து எங்கும் எஞ்ஞான்றும்
ஒளிவற நிறைந்த ஒண் சுடரே
முன்னையென் பாசம் முழுவதும் அகல
முகத் தலையகத்தமர்ந் தெனக்கே
கன்னலும் பாலும் தேனும் ஆரமுதுங்
கனியுமாய் இனியையாயினையே

## திருப்பல்லாண்டு

புரந்தரன் மாலயன் பூசலிட்டு
ஓலமிட்டின்னம் புகலரிதாய்
இரந்திரத் தழைப்ப என்னுயிராண்ட
கோவினுக்கு என் செயவல்லமென்னுங்
கரப்பதுங் கறவாத கற்பகனாகித்
கருணைக் கடல்
பரந்தும் நிரந்தும் வரம்பிலாப்கபாங்கற்கே
பல்லாண்டு கூறுதுமே.

## புராணம்

சொல்லு வதறியேன் வாழி தோற்றிய தோற்றம் போற்றி
வல்லை வந்தருளி யென்னெ வழித்தொண்டு கொண்டாய் போற்றி
எல்லையின் இன்ப வெள்ளம் எனக்கருள் செய்தாய் போற்றி
தில்லையம்பலத் துள்ளாடும் சேவடி போற்றி யென்ன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

ஆதிமுதனாளி லென்றன் தாயுடலிலேயிருந்து
ஆகமலமாகி நின்று – புவிமீதில்
ஆசையுடனேபிறந்து நேசமுடனே வளர்ந்து
ஆளழகனாகி நின்று – விளையாடிப்
பூதலமெலா மலைந்து மாதருடனே கலந்து
பூமிதனில்வேனு மென்று – பொருள்தேடிப்
போகமதிலே யுழன்று பாழ் நரகெய்தாமலுன்றன்
பூவடிகள் சேர அன்பு – தருவாயே
சீதை கொடு போகுமந்த ராவணனை மாளவென்ற
தீரனரி நாரணன்றன் – மருகோனே
தேவர் முனிவோர்கள் கொண்டல் மால்அரிபிரமாவும் நின்று
தேட அரிதானவன் தன் – முருகோனே
கோனதமலை வாழுகின்ற நாதரிடபாகநின்ற
கோமளிய நாதிதந்த – குமரேசா
கூடிவரு சூரர்தங்கள் மார்பையிரு கூறுகண்ட
கோடை நகர்வாழவந்த – பெருமாளே.

## வாழ்த்து

வையகநீடுக மாமழை மன்னுக
மெய் விரும்பிய அன்பர் விளங்குக
சைவ நன்நெறி தாந்தழைத் தோங்குக
தெய்வ வெண்திரு நீறு சிறக்கவே

ஆன்ம ஈடேற்றம் எய்திய திரு. சுப்பிரமணியம் பாலச்சந்திரன் அவர்கள் நற்கதி அடையுமாறு அன்னாரின் குலதெய்வமான நெடுந்தீவு கிழக்கு ஆலமாவனப் பிள்ளையார் மீது பராவல்

அம்மையப்பனோடமர்ந்திருக்க வலம் வந்து
ஞானப்பழம் பெற்றுலகுரைத்த நாதா
இம்மையிலே உன்னருள் கொண்ட குலத்தில்
பாலச்சந்திரன் பதம்பற்றத் தாழ்ந்தானுன்னை
செம்மைமுறை கடன் பணியணிகளெல்லாம்
அவன் குலமேயாற்றும் திறன் நீயேகாண்பாய்
ஓம் என்றிரைச்சலிடும் ஆலவனத் தீசா
தயவுடனுன்னடியணைக்குங் குலமுதலே போற்றி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் சுப்பிரமணியம் பாலச்சந்திரன் அவர்களின் வாழ்க்கை வரலாற்றகவல்.

தமிழ்த் தாய் மண் கெழு வடபுலத் தலைநகர் யாழ்பதியணைந்த
தீவகற்பமதனில் நானில வளஞ் செறிநிலபுலத் தொன்மையும்
கடலலை தாலாட்டக் கனிப்பொருள் வாரிவீச
மீனினம் பாயும் தெங்குயர் கற்பதருவளர் செறிந்திடும்
பாய்பரி ஓடப் பசுநிரை சூழும் படர் செடிகொடி மூலிகள்
உறைவளம் கொண்ட நிறைமலியூராம்
முன் வேந்தர் வெடியரசன்,மீகாமன் அரசியற்ற வழிகொண்ட
அப் பெரு தொல்புகழ் நெடும்பதி யென நெடுந்தீவன்னையில்
ஏர் வழிகுல மெனப்பார்புகழ் கூறும் முன் முதலிவழி யென
கந்தப்ப முதலி வழி யுதித்திட்டதூயோன் சுப்பிரமணியம்தானும்
சுந்தரப் பேரெழில் சுப்பிரமணிய மாங்கே தன்குல வழியாம்
வழி முறை வந்த தங்கமணியை வதுவை கொள் பயனாய்
உதித்திட்ட மக்கட் செல்வமதில் புத்திரர் ஐவரும் புதல்விகளுமாய்
புவனியில் செல்வமாய் எண்மரை பெற்றனர்
அவ் வெண்புதல்வரில் தலையனாய் மனோகரனும்
பின்னிளவலாய் உற்றிடும் இப்பாலச்சந்திரனும்
மூன்றா மிளவலாய் மதுரநாயகமும் அடுத்திரு புதல்விகளெனப்
பங்கையற் செல்வி யோக வேணியும்
நடுவிடைச் செம்மலாய் தில்லைநாதனும்
இளையளாய் உதித்திட்ட ஞானசக்தியும்
கடையெனச் சந்தானமாய் ஸ்ரீதரனும்
இந்தவழி வந்த வகை வாரிசுகள் தம்மில்
பின்னிட்டிரண்டாமவன் பாலச்சந்திரனும்
பிறந்த மண்ணிலே பிழைப்புழைப் பென்றுன்னியே
தன்னாலியன்ற தன்முயற்சி தான் கொண்டு
தந்தைகுலவழித் தொழி லென்ற ஏர்த்தொழிலொடு
மாட்டு வண்டி யோட்டுபவனாயும், தெங்கு, பனை வளத்
தொல் பொருள் தேடியும் பிறர்கடமை நாடாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீவனம் கொண்டு சித்திரமான சீர்வாழ்வு வாழவென
இல்லறத்தன் துணை இனிதே இசைக்கவென்றே
இப்பதியூர்தனில் எழுதிசையுற்றிடு வாழ்ந்த வைத்திலிங்கமும்
அத்துணைத்தேவி நல்லாள் அருந்திறல் பராசக்தியும்
இசைந்த இல்வாழ்வின் இனிய நற்பேறாய்
வாய்த்த நல்மடந்தை வாழ்வினிக்கவந்த அன்பரசியை
முறைவழுவா வளமொடு வதுவை கொண்டணைத்து
இல்வாழ்வைஇனிதுற இயற்றுங்கால் இணையிலர் பாலச்சந்திரன்
தன்குலம் மிளிரத் தலைமுறை மறையாத்தழைத்திட
வந்தவழிவகையாய் நன்மக்கட்பேறுதித்திட்ட செல்வமாய்
முதற்பொருத்தமாய்ப் பாரமதை ஏற்றியக்கப் பிரதீபனும்
வரிசையாய் வந்தடுத்திட்டு வளம் பொருக்கிடுவாள் டுஷ்யந்தினியும்
நடுவிடைச் செம்மலாய் சீர்முறை பேணவெனச் சிபிந்தனும்
தந்தை குணந்தவறாத் துடுப்புடன் குறுநகைக்குரிய கபிலனும்
ஐந்தின்கால்ச் செல்வமாய் சுந்தரத்திருமகளாய்ச் சுதர்சினியும்
மானினத்துடன் கொண்ட மயிலுடன் கூடிய காட்டழகென்ன
இன்பமாய் இலங்கிய இல்வாழ்வை ஓட்டிட
குடும்பசுமையென்று குறைபடாத்தாதை பாலச்சந்திரனும்
அன்னவன் தன்னை நோய்வந்தணுகிட்டநாள்
மரணமென்ற இறுதிவாழ்வுக் கிட்ட அறிவித்தல் போல்
தப்பிடாது இப்புவியில் உற்பவித்த ஜீவனெல்லாம்
எப்பொழுதோ இவ்வுலகு அகன்றிடவே வேண்டுமென
ஈசனிட்ட கட்டளையாய் இடித்துரைத்துள்ள தென்று
தருணங்கள் ஏதென்றே தெரியாது நின்றிட
தம் தொழிலை நடத்துகின்ற இயமர் கூட்டம்
நியதியொடு வந்தழைக்கப் பாலச்சந்திரனும்
சுற்றமும் பந்துக்களும் பதறி நின்றலற
ஆண்டு இரண்டாயிரத்துப்பத்தில் பூண்ட சித்திரை
திங்களிரண்டில் திகழ் மதி கூடும்
ஆண்ட நாயகன் பதம் ஏகினார் இளைப்பாறவே
சாந்தி பெற இறைஞ்சி நிற்போம் நாம்

**சுபம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனைவியின் பிரிவுத்துயர்

அருணன் போல் பேரொளியாய் அகத்தின் வாழ்வில்
அயராத மகிழ்வினொடு கலந்த நாதா
கருணையுடன் பிள்ளைகள் தம் பாசம் காட்டி
வருங்காலக் கற்பனைகள் போட்டுவைத்தீர்
தருணம் ஒருகாலம் வரும் என்று எண்ணி
உம் தக்க நகை கொண்டு பொழிப்புரைத்த
காரணங்கள் கண்டுநான் அறியுமுன்னே
எனைக்கலங்க வைத்து கரந்து சென்றதேனோ.

## பிள்ளைகள் இரங்கல்

காற்றிலடிபட்டதல்லால் எம்மைக்
கம்பெடுத்தடியாத தாதை யென்றும்
சுற்றமெல்லாம் சேர்ந்துரைக்கச் சீராய் வளர்த்திட்ட
ஐயாவே மகிழ்வினொடு எம் மலர்ச்சி
பெற்று நீங்கள் காணு முன்னே உற்றவிதிப்பயனோ
அன்றி மற்றும் மதித்தவறோ விட்டிழந்தோம்
ஆற்றி யெமைத் தேற்றி நிற்க என்செய்வோம்
ஏதுவழி என்றேங்கி நிற்கவிட்டு மறைந்தீரே அப்பாவே.

## தாயார் புலம்பல்

தொட்டிலிட்ட நாள் முதலாய்த் தங்கியவுன்
துடுப்புநடை கண்டு நான் களி கொண்டு
திட்டமுடன் தரணியிலே எண்ணியிட்ட
கனத்த கடமையெல்லாம் கார்த்திருந்து
கட்டுடனே நீயாற்றக் காலமெல்லாம் கண்டிருக்க
பட்டதுயர் கொடுத்தெனக்குப் பாதிவழி மறைந்ததென்ன
தட்டிக் கழித்தேனோ வுன்னை யென்ற
என்வினையோ எனைப்பிரிந்து விண்ணுலகு சென்றாயோ.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சகோதரர் மனத்தாபம்

பட்டதுன்ப காலத்திலும் பக்க பலந்தாழாது
உற்ற பிறவியே நீ உறுதுணை கொண்டிருந்தாய்
கெட்டுடல் நொந்து நீ கதியாய்ப் போன தென்ன
காரணம் ஏதென்று நாம் கண்டுதான் கொண்டிலமே
இட்டு நின்ற கருமமெல்லாம் இணைந்து நாம் இயற்ற
இனிக்காலமெல்லாம் பிரிந்திழந்தோம்
கட்டிழந்து நிற்கின்றோம் கலங்கியழுதென்ன
காவலனே யெமைவிட்டுக் காலனழைத்ததேனோ.

## உற்றார் ஊரார் புலம்பல்

கூடிவாழ்ந்த சோதரனே உன் கூச்சலெங்கே
கேட்ட செவியூடே ஒலிக்குதேயுன் பாடலெல்லாம்
நாடிவந்து சபைகளிலே மாந்தரெல்லாம் மகிழ்வெய்த
நகை கொண்ட குறும்புமொழி கொண்டுசிரிக்க வைத்தாய்
தேடிவந்து சிஞ்சியென்ற பெயரை அழைத்துவிட்டால்
சற்றுந்தரியா சமயத்தில் ஓடியுதவிடு நீ
ஆடி அடங்கும் வாழ்க்கையென்றுரைத்திருக்க
காலகதியில் கரைந்ததேனறிந்திலோமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகைமையறியாப் பாலச்சந்திரன்

## இரங்கற் செய்தி

அமரர் சுப்பிரமணியம் பாலச்சந்திரன் அவர்கள் தன் தாய்த்திருமண் நெடுந்தீவு கிழக்குப்பகுதியில் பிறந்து வளர்ந்ததில் இருந்தே "சிஞ்சி என்ற புனை பெயர் மூலம் இவரை அறியாதார் இல்லை. உலகியற்பற்றில் விருப்பு வெறுப்பின்றி உள்ளது போதும் என்ற மனவமைதியோடு எளிமையாக வாழ்ந்தும் எவருடனும் பகை நட்பு என்ற பேதமின்றி அளவளாவும் தன்மையும் பகைத்தன்மையினை சிறிது நேரமும் மனதில் கொள்ளாது உடன் மறந்து உறவுகொள்ளும் முறையும் இவரது வாழ்வில் இயல்பான அம்சங்களாய் பொருந்தி இருந்துவந்ததை அறியலாம்.

*"இன்னாமை இன்பம் எனக் கொளின்*
*ஆகும்தன் ஒன்னார் விழையும் சிறப்பு"*

என்ற பொய்யா மொழிக்கிணங்க எவ்வகைத் துன்பங்கள் நேர்ந்தபோதும் தம் வாழ்வில் அதையிட்டுச் சிறிதும் மனந்தளராதும் வெறுப்பின்றியும் துன்பங்களையும் இன்பங்களாகக் கருதி பகைவரையும் தன்பால் ஈர்த்துத் தன்னை போற்றத்தக்கதாக தனது குறுநகைப் பேச்சினாலும் விகட வசனங்களாலும் எல்லோரினாலும் கவரப்பட்டவர் என்றால் மிகையாகாது.

அன்னார் இவ்வளவு காலகதியில் யாரும் எதிர்பார்த்திராத வேளையில் குறுகிய கால வாழ்க்கையிலே இவரை நோய்பீடித்து மரணம் என்ற வாசலுக்கு அழைத்துச் சென்றதையிட்டு நாம் மிகவும் வேதனையும் அதிர்ச்சியும் அடைந்தோம். எனவே "இறப்பதற்கே தொழிலாகிப் பிறக்கின்றோமே என்ற மானிட நியதிக்கமைவாக அன்னாரின் பிரிவுத்துயரினால் ஆழ்ந்திருக்கும் அவர் தம் மனைவி, பிள்ளைகள், சகோதரர், உறவினருக்கும் மன நிம்மதியினையும் ஆறுதலையும் அளிக்க வேண்டுமெனவும் அன்னாரின் ஆன்மா நித்தியானந்த இழைப்பாறுதல் வேண்டியும் எல்லாம் வல்ல இறைவனைத் திருவருள் செய்யவேண்டும் என இறைஞ்சுகின்றேன்.

உடன்பிறவாச் சகோதரர்
தி.பாலசிங்கம் (பாலு)
கோட்டக் கல்வி அலுவலகப் பணியாளர்
நெடுந்தீவு.

18ம் வட்டாரம்
நெடுந்தீவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

*வாயடக்கித் தூங்காத அலைகள் என்றும்*
*மகிழ்ச்சியுடன் தாலாட்டும் வண்ணத் தீவு*
*நோயடங்கும் தீங்காற்றில் வாழ்ந்த மக்கள்*
*நூறாண்டு வரலாற்றைக் கண்டதீவு*

*பொற்சீந்திற் கொடி படரும் புதுமை நாடு*
*தொல்புகழின் சரித்திரங்கள் சுமக்கும் நாடு*
*நற்பசுக்கள் பால்கொடுக்க மறைக ளெல்லாம்*
*நறு நெய்யில் நீந்திவரும் நல்ல நாடு*
*அற்புதமாய் வெடியரசன் கோட்டை கட்டி*
*அந்நாளில் ஆட்சிசெய்த அழகு நாடே!*

எனப் பலவகைப் பெருமைகளைக் கூறிநிற்கும் நெடுந்தவின் 15ம் வட்டாரத்தைச் சேர்ந்தவர்தான் அமரர் சுப்பிரமணியம் பாலச்சந்திரன் ஆவார். இவரை அனைவரும் "சிஞ்சி என்றே அன்புடன் அழைப்பர்.

நெடுந்தீவின் சிறந்த விவசாயியாகவும், ஏராளம் கால்நடைகளின் உரிமையாளராகவும், எம் தீவகத்தின் தனிச் சிறப்பான விருந்தோம்பற் பணியிலும் தலைசிறந்து விளங்கியவர் அமரரின் தந்தை திரு. சுப்பிரமணியம் அவர்கள். நெடுந்தீவு பல.நோ. கூ. சங்கத்தின் கிளை முகாமையாளராகப் பல வருடங்கள் பணியாற்றிய பெருமைக் குரியவர்.

இளமையிலே பல்வகை ஆற்றலும் திறமையும் கொண்டு விளங்கினார் அமரர் சு.பாலச்சந்திரன் அவர்கள். இசைக்கேற்ற இனிமையான குரல்வளம். திருமுருக கிருபானந்தவாரியார் அவர்களைப் போலப் பேசினால் வாரியாரே அங்கு வந்து விட்டாரோ என எண்ணத் தோன்றும்.

அமரர் அவர்கள் வாழ்ந்த சூழல் தாம் கல்வியைத் தொடர்ந்தும் கற்பதிலும் பார்க்கச் சிறந்த விவசாயியாகவும், பல கால்நடைகளின் உரிமையாளராகவும் விளங்க விரும்பினார் போலும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெடுந்தீவு கிழக்கு வைத்தியலிங்கம் தம்பதிகளின் அன்புமகள் அன்பரசியை தன் வாழ்க்கைத் துணைவியாகத் தெரிந்து கொண்டார்.

***"காதலொருவனைக் கைப்பிடித்தே அவன்***
***காரியம் யாவிலும் கைகொடுத்து"***

இல்லறமாகிய நல்லறத்தை வள்ளுவன் கூறுவதுபோல்

***"அன்பும் அறனும் உடைத்தாயின் இல் வாழ்க்கை***
***பண்பும் பயனும் அது"***

என வாழ்வாங்கு வாழ்ந்து ஐந்து குழந்தைச் செல்வங்களைப் பெற்று மகிழ்வுடன் வாழ்ந்தனர்.


தனக்கென வாழாது பிறர்க்குரியவனாய் வாழ்ந்து சாதி, மத பேதமின்றி அனைவருடனும் அன்புடன் பழகினார். எவ்வாறுதான் நாம் வாழ்ந்தாலும் இந்த உலகின் பெருமை கூறவந்த திருக்குறள்

***"நெருநல் உளன் ஒருவன் இன்று இல்லை என்னும்***
***பெருமை உடைத்து இவ் வுலகு"*** (குறள்.336)

எனவன்றோ குறிப்பிடுகின்றது.

ஆகவே நம்முடன் வாழ்ந்து அன்புடன் பழகிய அமரர் அவர்கள் இறந்த செய்தி அனைவரையும் துன்பத்திலும் துயரித்திலும் ஆழ்த்தியது.

அன்னாரை இழந்து துன்பத்தில் துயருறும் அன்பு மனைவி , பாசம் நிறைந்த பிள்ளைகள், சொலலொணாச் சோகத்தில் வாழும் சகோதர சகோதரிகள், மைத்துன மைத்துனிமார் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் எம் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆன்மா சாந்தியடைய இறையருளைப் பிரார்த்திக்கின்றோம்.



**பல. நோ. கூ. சங்கம்,**
**நெடுந்தீவு 12.**

**கலாபூஷணம்**
**புலவர் அரியநாயகம் J.P**
**தலைவர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச நாடுகளும் அதன் தலைநகரங்களும்

| | |
|---|---|
| 01. இலங்கை | – ஜெயவர்த்தனபுரம் |
| 02. இந்தியா | – புது டில்லி |
| 03. வங்காளம் | – டாக்கா |
| 04. மாலைதீவு | – மலே |
| 05. பாகிஸ்தான் | – இஸ்லாமாபாத் |
| 06. நேபாளம் | – காட்மண்டு |
| 07. பூட்டான் | – திம்பு |
| 08. ஆப்கானிஸ்தான் | – காபுல் |
| 09. ஐக்கிய அரபு எமிரேட் | – அபுதாபி |
| 10. இஸ்ரவேல் | – டெல்அவிபு |
| 11. ஈரான் | – தெகிரான் |
| 12. ஈராக் | – பாக்தாத் |
| 13. அங்கோலா | – கவான்னா |
| 14. அயர்லாந்து | – டப்ளின் |
| 15. அல்பேனியா | – டிரினா |
| 16. அவுஸ்ரேலியா | – கன்பரா |
| 17. அஜன்தீனா | – புவனஸ்அயர்ஸ் |
| 18. ஆஸ்திரியா | – வியன்னா |
| 19. இத்தாலி | – றோம் |
| 20. இந்தோனேசியா | – யகர்த்தா |
| 21. ஈக்வடோர் | – குயிற்றோ |
| 22. உகண்டா | – கம்பாலா |
| 23. உருகுவே | – மொன்ரேவிடியோ |
| 24. எகிப்து | – கெய்ரோ |
| 25. எதியோப்பியா | – அடிஸ் அபாபா |
| 26. எல்க்சல்படோர் | – சான்சல்படோர் |
| 27. ஐக்கிய அமெரிக்கா | – வாசிங்டன் |
| 28. ஐக்கிய இராச்சியம் | – லண்டன் |
| 29. ஓமான் | – மஸ்கட் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| 30. கங்கெரி | – புடாபெஸ்ற் |
| 31. கட்டார் | – டோகா |
| 32. கம்பியா | – பன்யுல் |
| 33. கம்பூச்சியா | – நாம்பென் |
| 34. கமரோன் | – ஜவுண்டே |
| 35. கயானா | – ஜோர்ச்டவுண் |
| 36. கனடா | – ஒட்டாவா |
| 37. காபொன் | – லிபரேவில் |
| 38. கானா | – அக்ரா |
| 39. ஜேர்மனி | – பேளின் |
| 40. கியூபா | – ஹவானா |
| 41. கிறீஸ் | – அதென்ஸ் |
| 42. கினியா | – கொனாக்றி |
| 43. குவாட்டமாலா | – குவாட்டமாலா |
| 44. ஹுவாண்டா | – கிகாலி |
| 45. குவைத் | – குவைத் |
| 46. கெனியா | – னைரேபி |
| 47. கொங்கொங் | – விக்ரோறியா |
| 48. கொங்கோ | – பிறேசவில் |
| 49. கொலம்பியா | – ஹுபாகோட்டா |
| 50. கொண்டூரன் | – ரெகுசிகன்பா |
| 51. கோஸ்ரறிக்கா | – சன்யோஸ் |
| 52. ஸ்பெயின் | – மட்றிட் |
| 53. சவுதி அரேபியா | – றியாட் |
| 54. சாட் | – டயாமெனா |
| 55. சாம்பியா | – லுசாக்கா |
| 56. சிம்பாவே | – ஹறாறே |
| 57. சியாலியோன் | – பிறீரவுன் |
| 58. சில்லி | – சந்தியாகோ |
| 59. சீனா | – பீக்கிங் |
| 60. சுவிஸ் | – பேர்ண் |
| 61. சுவீடன் | – ஸ்ரொக்கோம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

62. சூடான் – காட்டூம்
63. சூரினாம் – பரமாறிபோ
64. செக்கோசிலவாக்கியா – பிறேக்
65. செனிகல் – டக்கார்
66. சோமாலியா – மொசபுசு
67. ரசியா – மொஸ்கோ
68. டேன்மார்க் – கொப்பன்கேயன்
69. தன்சானியா – டார்எஸ்சலா
70. தாய்வான் – ரைபி
71. தாய்லாந்து – பாங்கொக்
72. தென்கொரியா – சியோல்
73. துருக்கி – அங்காரா
74. நமீபீயா – வின்ட்கோக்
75. நிக்கரக்குவா – மனாகுவா
76. நியூசிலாந்து – வெலிங்டன்
77. நெதர்லாந்து – ஆம்ஸ்ரடாம்
78. நைகர் – நியாமி
79. நைஜீரியா – லாகோஸ்
80. நோர்வே – ஒஸ்லோ
81. பகரேன் – பனாமா
82. பர்மா (மியான்மார்) – ரங்கூன்
83. பராகுவே – அசுன்ஸ்ஜென்
84. பல்கேரியா – சோபியா
85. பனாமா – பனாமா
86. பிரான்ஸ் – பாரிஸ்
87. பிலிப்பைன்ஸ் – மணிலா
88. ஜோடான் – அம்மான்
89. லெமனான் – பெயிரோட்
90. சிகிரியா – டமாஸ்கஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச தினங்கள்

| | | |
|---|---|---|
| ஜனவரி | 10 | உலக சிரிப்புத் தினம் |
| ஜனவரி | 31 | உலக தொழுநோயாளர் தினம் |
| பெப்ரவரி | 14 | உலக காதலர் தினம் |
| மார்ச் | 08 | சர்வதேச மகளிர் தினம் |
| மார்ச் | 15 | உலக ஊனமுற்றோர் தினம் |
| மார்ச் | 21 | உலக வன தினம் |
| மார்ச் | 22 | உலக நீர் தினம் |
| மார்ச் | 23 | உலக வளிமண்டலவியல் தினம் |
| மார்ச் | 24 | உலக கசரோக தினம் |
| மார்ச் | 27 | உலக நாடக தினம் |
| ஏப்ரல் | 07 | உலக ஆரோக்கிய தினம் |
| ஏப்ரல் | 15 | உலக நூலக தினம் |
| ஏப்ரல் | 17 | உலக இரத்த தினம் |
| ஏப்ரல் | 18 | உலக மரபுரிமைத் தினம் |
| ஏப்ரல் | 22 | உலக பூமி தினம் |
| ஏப்ரல் | 23 | உலக புத்தக தினம் |
| ஏப்ரல் | 26 | உலக பாதிக்கப்பட்ட சிறுவர் தினம் |
| மே | 01 | உலக தொழிலாளர் தினம் |
| மே | 02 | ஞாயிறு உலக தாய் தினம் |
| மே | 03 | உலக பத்திரிகை சுதந்திர தினம் |
| மே | 08 | உலக செஞ்சிலுவை தினம் |
| மே | 08 | உலக முஸ்லீம் தினம் |
| மே | 12 | உலக தாதியர் தினம் |
| மே | 13 | உலக அன்னையர் தினம் |
| மே | 15 | உலக குடும்ப தினம் |
| மே | 17 | உலக தகவல் தொடர்பு தினம் |
| மே | 24 | பொதுநலவாய தினம் |
| மே | 31 | புகைத்தல் எதிர்ப்பு தினம் |
| யூன் | 01 | உலக குழந்தைகள் தினம் |
| யூன் | 04 | அடக்குமுறைக்கு எதிரான தினம் |
| யூன் | 05 | உலக சுற்றுச் சூழல் தினம் |
| யூன் | 17 | உலக தந்தையர் தினம் |
| யூன் | 26 | போதைப்பொருள் தடுப்பு தினம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| யூன் | 27 | உலக சலரோக தினம் |
| யூலை | 11 | உலக மக்கள் தொகை தினம் |
| யூலை | 28 | உலக அகதிகள் தினம் |
| ஆகஸ்ட் | 06 | கிறோசீமா அணுகுண்டு தினம் |
| ஆகஸ்ட் | 09 | நாகசாகி அணுகுண்டு தினம் |
| செப்ரெம்பர் | 02 | உலக தெங்கு தினம் |
| செப்ரெம்பர் | 03 | சர்வதேச சமாதான தினம் |
| செப்ரெம்பர் | 08 | உலக எழுத்தறிவு தினம் |
| செப்ரெம்பர் | 13 | தாத்தா பாட்டி தினம் |
| செப்ரெம்பர் | 16 | உலக ஓசோன் தினம் |
| செப்ரெம்பர் | 26 | செவிப்புலன் அற்றோர் தினம் |
| செப்ரெம்பர் | 27 | உலக சுற்றுலா தினம் |
| ஒக்ரோபர் | 01 | உலக சிறுவர் முதியோர் தினம் |
| ஒக்ரோபர் | 03 | உலக குடியிருப்பு தினம் |
| ஒக்ரோபர் | 04 | உலக விலங்கு தினம் |
| ஒக்ரோபர் | 05 | உலக உறைவிட தினம் |
| ஒக்ரோபர் | 06 | உலக ஆசிரியர் தினம் |
| ஒக்ரோபர் | 09 | உலக தபால் நிலைய தினம் |
| ஒக்ரோபர் | 10 | உலக உளநல தினம் |
| ஒக்ரோபர் | 12 | உலக கண்பார்வை தினம் |
| ஒக்ரோபர் | 13 | உலக இயற்கை அனர்த்த தினம் |
| ஒக்ரோபர் | 15 | வெள்ளைப் பிரம்பு தினம் |
| ஒக்ரோபர் | 16 | உலக உணவு தினம் |
| ஒக்ரோபர் | 17 | வறுமை ஒழிப்பு தினம் |
| ஒக்ரோபர் | 23 | உலக இரத்த தான தினம் |
| ஒக்ரோபர் | 31 | உலக சிக்கன தினம் |
| நவம்பர் | 09 | சட்ட சேவைகள் தினம் |
| நவம்பர் | 16 | உலக பொறுமை தினம் |
| நவம்பர் | 17 | உலக மாணவர் தினம் |
| நவம்பர் | 26 | உலக சட்ட தினம் |
| டிசம்பர் | 01 | உலக எயிட்ஸ் தினம் |
| டிசம்பர் | 10 | மனித உரிமை தினம் |
| டிசம்பர் | 23 | உலக விவசாய தினம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலுதல் செய்கின்றோம்

எம் தாய்த்திரு அன்னையாம் நெடுகிழக்கில்
அவதரித்து துன்பத்திலும் இன்பமாய் வாழ்ந்து
எம்மை விட்டுப்பிரிந்து நித்திய இளைப்பாறும்
பொருட்டு அமரத்துவம் எய்திய எமது
அன்புத் தந்தையாம் திரு. சுப்பிரமணியம்
பாலச்சந்திரன் அவர்களின் பிரிவுத்துயரில்
பங்கேற்ற உற்றார், உறவினர், அயலவருக்கும்
அன்னார் நோயுற்றிருந்த காலத்திலும் நேரில்
வந்து பார்த்து உதவிகள் புரிந்தும் எமக்கு
ஆறுதல் அளித்த அயலவர், உற்றார்,
உறவினர்களுக்கும் இறுதிக்கிரியைகளில்
கலந்துகொண்டு பலவழிகளிலும் ஒத்துதவி
நல்கிய நண்பர்கள், அயலவர்கள்,
உறவினர்களுக்கும் மற்றும் அபரக்கிரியைகளில்
கலந்து கொண்டு உதவிகள் பல
புரிந்தோருக்கும் இம் மலரினைச் சிறப்பாகத்
தொகுத்துதவிய அன்பருக்கும் எமது மனமார்ந்த
நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்



நெடுந்தீவு கிழக்கு,
நெடுந்தீவு.
04.05.2011

இங்ஙனம்
மனைவி, பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் பாலச்சந்திரன் அவர்

## பிதா வழி

கந்தர் இராமனாதர் + தங்கம்மா

ஆறுமுகம் + சின்னம்மா

கதிரவேலு + வள்ளியம்மை

சுப்பிரமணியம்

தியாகராசா + யோகமணி

சுப

மனேகரன் + முத்துராணி

**பாலச்சந்திரன்** + அன்பரசி

மதுரநாயகம் + கோமளம்

பங்கையற்செல்வி + பரமலிங்கம்

யோக

பிரதீபன்

டுஷ்யந்தினி

சிபிந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரன் அவர்களின் வம்சாவழி முறை

## அன்னை வழி

பண்டாரிஅம்பலம் + சின்னம்மா

தியாகராசா + யோகமணி

தெய்வானைப்பிள்ளை + சின்னத்தம்பி

தங்கமணி

நாகம்மா + குமாரசாமி

சுப்பிரமணியம் + தங்கமணி

யற்செல்வி + லிங்கம்

யோகவேணி

தில்லைநாதன் + பத்மாவதி

ஞானசக்தி + இலக்கினசிங்கம் (அமரர்)

ஸ்ரீதரன் + பத்மாவதி

சிபிந்தன்

கபிலன்

சுதர்சினி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அறநெறி அச்சகம், மருதனார்மடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org